# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1610 - 2009 ජූලි 10 වැනි සිකුරාදා - 2009.07.10

*1610 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 826 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 842 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை – நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்துங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, யூலை மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## கிராமியக் கைத்தொழில், சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு

### வீடியோ புகைப்படப்பிடிப்பாளர் பதவி

கிராமியக் கைத்தொழில், சுயதொழில் அபிவிருத்தி அமைச்சின் வீடியோ புகைப்படப்பிடிப்பாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கை விண்ணப்பதாரர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சகல விண்ணப்பப் படிவங்களும் கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரித்து ''செயலாளர், கிராமியக் கைத்தொழில் சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு, இல. 780, மருதானை வீதி, கொழும்பு 10'' என்ற முகவரிக்கு 2009.07.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தை வைத்துஅனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வீடியோ புகைப்படப்பிடிப்பாளர் பதவி'' எனக் குறிப்பிட வேண்டும்.

**1. சம்பள அளவுத்திட்டம் :**

1.1 இப்பதவிக்குரிய மாதச் சம்பள அளவுத்திட்டம் : பொ. நி. சு. 06/2006 (iv) இற்கேற்ப (MT-01-2006-A) : ரூபா 14,425 - 10X145 - 11X170 - 6X240 - 14X320 - ரூபா 23,665.

**2. தகைமைகள் :**

எல்லா விண்ணப்பதாரர்களும்-

2.1 சிறந்த ஒழுக்கம் மற்றும் நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

2.2 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

2.3 2009.07.31 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை உரியதாகாது.)

**3. கல்வித் தகைமைகள் :**

3.1 கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா. த.) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம், மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச்சித்திகளுடன் 6 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத வகையில் சித்தி அடைந்திருத்தல்.

**4. தொழில் மற்றும் வேறு தகைமைகள் :**

4.1 புகைப்படக் கலைஞர் ஒருவராக 5 வருடகால அனுபவ முள்ளவராக இருத்தல் வேண்டும். (சான்றிதழ்கள் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் அல்லது தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனம் ஒன்றில் புகைப்படக் கலை பற்றிய டிப்ளோமா ஒன்று அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் புகைப்படக் கலை பற்றிய ஒரு வருடத்துக்கு குறையாத முழுநேர அல்லது இரண்டு வருடத்துக்குக் குறையாத பகுதிநேர தொழில் பாடநெறி ஒன்றைப் பின்பற்றிய சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**5. ஆட்சேர்ப்பு முறை :**

5.1 முறைசார் நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை ஒன்றின் மூலம் தகுதியுடையவர்கள் தெரிவுசெய்யப்படுவர். ஒவ்வொரு பரீட்சைக்காகவும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகள் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், இரண்டு பரீட்சைகளின தும் புள்ளிகளைக் கூட்டி கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்கள், உரிய பதவிக்காக சேர்த்துக் கொள்ளப்படுவர்.

5.2 இந்நியமனம், கிராமியக் கைத்தொழில், சுயதொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்படும்.

**6. சேவை நிபந்தனைகள் :**

6.1 பதவியில் நியமனம் செய்யப்பட்ட திகதி முதல் மூன்று வருட காலத்திற்குள் முதலாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும். (பின்னிணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது.)

6.2 இப்பதவி நிரந்தர ஓய்வூதிய உரித்துடையதாவதுடன், விதவைகள் அநாதைகள்/தபுதாரர் அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்பு செலுத்துதல் வேண்டும்.

6.3 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் ஆணைக்குழுவின் விதிகளுக்கும் அரசினால் வெளியிடப்படுகின்ற வேறு ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் அமைய செயலாற்றுதல் வேண்டும்.

6.4 நியமனம் மூன்று (03) வருடங்கள் தகுதிகாண் நிலைக் காலத்திற்கு உட்படும். தற்போது அரசின் நிரந்தரமான பதவி வகிப்பவர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டால், ஒருவருட பதில் கடமைக் காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.

6.5 விண்ணப்பதாரி ஒருவர் எந்த அரச கரும மொழியில் சேவையில் சேர்ந்தாரோ அதற்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியிலும் சேவைக்குச் சேர்ந்து 5 வருட காலப்பகுதிக்குள் 2007.05.28 ஆந் திகதியைக் கொண்ட இல. 07/ 2007 பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

7. தற்போது அரச சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. சகல அம்சங்களிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

நிஹால் சோமவீர,
செயலாளர்,
கிராமியக் கைத்தொழில்,
சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு.

கிராமியக் கைத்தொழில்,
சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு,
இல. 780, மருதானை வீதி,
கொழும்பு 10.
2009, யூன் 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிராமியக் கைத்தொழில், சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு**

வீடியோ புகைப்படப்பிடிப்பாளர் பதவி

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ———.
(ii) முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) :———.

2. முகவரி :
(i) தனிப்பட்ட முகவரி :———.
(ii) கடமை முகவரி (அரச சேவையைச் சேர்ந்தவராயின்) :———.

3. (i) பிறந்த திகதி :

| ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(ii) 2009.07.31 ஆந் திகதியன்று வயது :

| வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

5. இனம் :———.

6. ஆணா/பெண்ணா :———.

7. (i) கல்வித் தகைமைகள் :———.
(ii) தொழில் தகைமைகள் :———.
(iii) அனுபவம் :———.

8. அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டவரா ? அல்லது பதவி வறிதாக் கப்பட்டதாக கருதப்பட்டவரா ? என்பது பற்றிய விபரம் :———.

9. (i) ஏதேனும் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டுள்ளீர்களா ? : ———.

(ii) ஆம் எனில் அதுபற்றிய விபரங்கள் :———.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிட்டுள்ள ஏதேனும் விடயம் பொய்யானது அல்லது பிழையானது என தெரிவுசெய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகுதியற்றவர் ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின்பின் தெரியவருமாயின் நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

———,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :———.

**விண்ணப்பதாரி அரச சேவையைச் சேர்ந்தவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி ................................................................ இத்திணைக்களத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், அவர்/ அவள் இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க லாம்/விடுவிக்க முடியாது.

———,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :———.
பதவி :———.
திணைக்களம் :———.
(பதவி முத்திரையுடன்)
திகதி :———.

பின்னிணைப்பு 1

வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பாடத்திட்டம், இரண்டு வினாத் தாள்களைக் கொண்டது.

(i) வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான, தாபனக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் அடங்கிய 02 மணித்தியால வினாப் பத்திரமொன்று - 100 புள்ளிகள்

1. தாபனக்கோவை : II, III, IV, V, VIII, XII, XIII, XIV, XIX, XLVII, XLVIII

2. நிதி ஒழுங்குவிதிகள் : I, III அத்தியாயங்கள்

(ii) விடய அறிவு (நேரம் : 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்)

* வீடியோ புகைப்படக் கருவி வகைகள், உபகரணங்கள் பற்றிய அறிவு
* புகைப்படக் கருவி கோணங்கள் பற்றிய அறிவு
* புகைப்படக் கருவி வில்லைகள் (lenses) பற்றிய அறிவு
* செய்திகளை உள்வாங்குவதற்காக உருவ கட்டமைப்பை பெற்றுக்கொள்ளும் நுட்பமுறைகள் பற்றிய அறிவு
* அறிக்கை செயல்திட்டங்களுக்காக படங்களை எடுத்தல்
* அமைச்சின் வீடியோ புகைப்படக் கலைஞர் ஒருவருக்குரிய பொறுப்புக்கள்
* புகைப்படக் கருவியின் பாதுகாப்புத் தன்மை வழங்குவது பற்றிய அறிவு
* தயாரித்தல், முறைகள் பற்றிய அறிவு
* உபகரணங்கள் திருத்துதல் பற்றிய அறிவு
* Non linie திருத்தும் முறைகள் பற்றிய அறிவு
* வீடியோ, புகைப்படம் எடுத்தல் மற்றும் புகைப்படம் எடுத்தல் பற்றிய அடிப்படை சித்தாந்தங்கள்

வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்துவதற்காக ஆகக்குறைந்தது ஒரு பாடத்திற்கு 40 புள்ளிகள் வீதம் பெற்றுக்கொள்ள வேண்டும். வயதை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறன்காண் தடைப்பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படமாட்டாது.

7-261/1

## கிராமியக் கைத்தொழில், சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு

வீடியோ புகைப்பட உதவியாளர் பதவி

கிராமியக் கைத்தொழில், சுயதொழில் அபிவிருத்தி அமைச்சின் வீடியோ புகைப்பட உதவியாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கை விண்ணப்பதாரர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சகல விண்ணப்பப் படிவங்களும் கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரித்து ''செயலாளர், கிராமியக் கைத்தொழில் சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு, இல. 780, மருதானை வீதி, கொழும்பு 10'' என்ற முகவரிக்கு 2009.07.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தை வைத்துஅனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வீடியோ புகைப்பட உதவியாளர் பதவி'' எனக் குறிப்பிட வேண்டும்.

**1. சம்பள அளவுத்திட்டம் :**

1.1 இப்பதவிக்குரிய மாதச் சம்பள அளவுத்திட்டம் :
பொ. நி. சு. 06/2006 (iv) இற்கேற்ப (PL-01-2006-A) :
ரூபா 11,730 - 10x120 - 10x130 - 10x145 - 12x160 - ரூபா 17,600

**2. தகைமைகள் :**

எல்லா விண்ணப்பதாரர்களும் -

2.1 சிறந்த ஒழுக்கம் மற்றும் நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

2.2 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

2.3 2009.07.31 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை உரியதாகாது.)

**3. கல்வித் தகைமைகள் :**

3.1 கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா. த.) பரீட்சையில் 2 பாடங்களில் திறமைச்சித்திகளுடன் ஆறு பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் சித்தி அடைந்திருத்தல்.

**4. தொழில் மற்றும் வேறு தகைமைகள் :**

4.1 புகைப்படப்பிடிப்பாளராக அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும். (சான்றிதழ்கள் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.)

**5. ஆட்சேர்ப்பு முறை :**

5.1 முறைசார் நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை ஒன்றின் மூலம் தகுதி வாய்ந்தவர்கள் தெரிவுசெய்யப்படுவர். ஒவ்வொரு பரீட்சைக்காகவும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகள் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், இரண்டு பரீட்சைகளின தும் புள்ளிகளைக் கூட்டி ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்கள், உரிய பதவிக்காக சேர்த்துக் கொள்ளப்படுவர்.

5.2 இந்நியமனம் வழங்கப்படுவது கிராமியக் கைத்தொழில், சுயதொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினாலாகும்.

**6. சேவை நிபந்தனைகள் :**

6.1 பதவியில் நியமனம் செய்யப்பட்ட திகதி முதல் மூன்று வருட காலத்திற்குள் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும். (பின்னிணைப்பு 1 இல் காட்டப் பட்டுள்ளது.)

6.2 இப்பதவி நிரந்தர ஓய்வூதிய உரித்துடையதாவதுடன், விதவைகள் அநாதைகள்/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செலுத்துதல் வேண்டும்.

6.3 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் ஆணைக்குழுவின் விதிகளுக்கும் அரசினால் வெளியிடப்படுகின்ற வேறு ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் அமைய செயலாற்றுதல் வேண்டும்.

6.4 நியமனம் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படும். தற்போது அரசின் நிரந்தரமான பதவி வகிப்பவர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டால், ஒருவருட பதில் கடமைக் காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.

6.5 விண்ணப்பதாரி ஒருவர் எந்த அரச கரும மொழியில் சேவையில் சேர்ந்தாரோ அதற்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியிலும் சேவைக்குச் சேர்ந்து 5 வருட காலப்பகுதிக்குள் 2007.05.28 ஆந் திகதியைக் கொண்ட இல. 07/2007 பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடு களின்படி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

7. தற்போது அரச சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. சகல அம்சங்களிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

நிஹால் சோமவீர,
செயலாளர்,
கிராமியக் கைத்தொழில்,
சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு.

கிராமியக் கைத்தொழில்,
சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு,
இல. 780, மருதானை வீதி,
கொழும்பு 10,
2009, யூன் 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## கிராமியக் கைத்தொழில், சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு

**வீடியோ புகைப்பட உதவியாளர் பதவி**

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ———.
(ii) முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) :———.

2. முகவரி :
(i) தனிப்பட்ட முகவரி :———.
(ii) கடமை முகவரி (அரச சேவையைச் சேர்ந்தவராயின்) :———.

3. (i) பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ii) 2009.07.31 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

☐☐☐☐☐☐☐☐☐☐

5. இனம் :———.

6. ஆணா/பெண்ணா :———.

7. (i) கல்வித் தகைமைகள் :———.
(ii) தொழில் தகைமைகள் :———.
(iii) அனுபவம் :———.

8. அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டவரா ? அல்லது பதவி வறிதாக் கப்பட்டவராக கருதப்பட்டவரா ? என்பது பற்றிய விபரம் :———.

9. (i) ஏதேனும் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டுள்ளீர்களா ? : ———.

(ii) ஆம் எனில் அதுபற்றிய விபரங்கள் :———.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதியுரைக்கின்றேன். இங்கு குறிப்பிட்டுள்ள ஏதேனும் விடயம் பொய்யானது அல்லது பிழையானது என தெரிவுசெய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகுதியற்றவர் ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின்பின் தெரியவருமாயின் நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

———,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :———.

**விண்ணப்பதாரி அரச சேவையைச் சேர்ந்தவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி ............................................................ இத்திணைக்களத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், அவர் இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது.

———,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :———.
பதவி :———.
திணைக்களம் :———.
(பதவி முத்திரையுடன்)
திகதி :———.

*பின்னிணைப்பு 1*

| | |
|---|---|
| வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - வீடியோ புகைப்படப்பிடிப்பு மற்றும் புகைப்படப்பிடிப்பு அதற்குரிய நடவடிக்கைகள் பற்றிய அறிவு | - 40 புள்ளிகள் |
| வரவு, வேலை நடைமுறைக்காக | - 60 புள்ளிகள் |

வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்திபெறுவதற்காக குறைந்தபட்சம் 40 புள்ளிகளாவது பெற்றுக்கொள்ளல் வேண்டும். வயதை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறன்காண் தடைப்பரீட்சை யிலிருந்து விடுவிக்கப்பட மாட்டாது.

7-261/2

---

## கிராமியக் கைத்தொழில், சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு

### புகைப்படப்பிடிப்பாளர் பதவி

கிராமியக் கைத்தொழில், சுயதொழில் அபிவிருத்தி அமைச்சின் புகைப்படப்பிடிப்பாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கை விண்ணப்பதாரர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சகல விண்ணப்பப் படிவங்களும் கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரித்து ''செயலாளர், கிராமியக் கைத்தொழில் சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு, இல. 780, மருதானை வீதி, கொழும்பு 10'' என்ற முகவரிக்கு 2009.07.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தை வைத்து அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''புகைப்படப்பிடிப்பாளர் பதவி'' எனக் குறிப்பிட வேண்டும்.

**1. சம்பள அளவுத்திட்டம் :**

1.1 இப்பதவிக்குரிய மாதச் சம்பள அளவுத்திட்டம் :
பொ. நி. சு. 06/2006 (iv) இற்கேற்ப (MT-01-2006-A) :
ரூபா 14,425 - 10X145 - 11X170 - 6X240 - 14X320 - ரூபா 23,665.

**2. தகைமைகள் :**

எல்லா விண்ணப்பதாரர்களும் -

2.1 சிறந்த ஒழுக்கம் மற்றும் நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

2.2 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்

2.3 2009.07.31 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை உரியதாகாது.)

**3. கல்வித் தகைமைகள் :**

3.1 கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா. த.) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம், மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத வகையில் சித்தி அடைந்திருத்தலும்,
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் அல்லது அரசினால்

அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனம் ஒன்றில் புகைப்படக் கலை பற்றிய டிப்ளோமா ஒன்று அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் புகைப்படக்கலை பற்றிய ஒரு வருடத்துக்கு குறையாத முழுநேர அல்லது இரண்டு வருடத்துக்குக் குறையாத பகுதிநேர தொழில் பாடநெறி ஒன்றைப் பின்பற்றிய சான்றிதழ் ஒன்று இருத்தல் வேண்டும்.

**4. தொழில் மற்றும் வேறு தகைமைகள் :**

4.1 புகைப்படக் கலைஞர் ஒருவராக 5 வருடகால அனுபவ முள்ளவராக இருத்தல் வேண்டும். (சான்றிதழ்கள் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.)

**5. ஆட்சேர்ப்பு முறை :**

5.1 முறைசார் நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை ஒன்றின் மூலம் தகுதியுடையவர்கள் தெரிவுசெய்யப்படுவர். ஒவ்வொரு பரீட்சைக்காகவும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகள் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், இரண்டு பரீட்சைகளின தும் புள்ளிகளைக் கூட்டி ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர், உரிய பதவிக்காக சேர்த்துக் கொள்ளப்படுவர்.

5.2 இந்நியமனம், கிராமியக் கைத்தொழில், சுயதொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்படும்.

**6. சேவை நிபந்தனைகள் :**

6.1 பதவியில் நியமனம் செய்யப்பட்ட திகதி முதல் மூன்று வருட காலத்திற்குள் முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும். (பின்னிணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது.)

6.2 இப்பதவி நிரந்தர ஓய்வூதிய உரித்துடையதாவதுடன், விதவைகள் அநாதைகள்/தபுதாரர் அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்பு செலுத்துதல் வேண்டும்.

6.3 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் ஆணைக்குழுவின் விதிகளுக்கும் அரசினால் வெளியிடப்படுகின்ற வேறு ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் அமைய செயலாற்றுதல் வேண்டும்.

6.4 நியமனம் மூன்று (03) வருடங்கள் தகுதிகாண் நிலைக் காலத்திற்கு உட்படும். தற்போது அரசின் நிரந்தரமான பதவி வகிப்பவர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டால், ஒருவருட பதில் கடமைக் காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.

6.5 விண்ணப்பதாரி ஒருவர் எந்த அரச கரும மொழியில் சேவையில் சேர்ந்தாரோ அதற்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியிலும் சேவைக்குச் சேர்ந்து 5 வருட காலப்பகுதிக்குள் 2007.05.28 ஆந் திகதியைக் கொண்ட இல. 07/ 2007 பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

7. தற்போது அரச சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. சகல அம்சங்களிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

நிஹால் சோமவீர,
செயலாளர்,
கிராமியக் கைத்தொழில்,
சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு.

கிராமியக் கைத்தொழில்,
சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு,
இல. 780, மருதானை வீதி,
கொழும்பு 10.
2009, யூன் 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிராமியக் கைத்தொழில், சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு**

**புகைப்படப்பிடிப்பாளர் பதவி**

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ———.
(ii) முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) :———.

2. முகவரி :
(i) தனிப்பட்ட முகவரி :———.
(ii) கடமை முகவரி (அரச சேவையைச் சேர்ந்தவராயின்) :———.

3. (i) பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ii) 2009.07.31 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

☐☐☐☐☐☐☐☐☐☐

5. இனம் :———.

6. ஆணா/பெண்ணா :———.

7. (i) கல்வித் தகைமைகள் :———.
(ii) தொழில் தகைமைகள் :———.
(iii) அனுபவம் :———.

8. அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டவரா ? அல்லது பதவி வறிதாக் கப்பட்டதாக கருதப்பட்டவரா ? என்பது பற்றிய விபரம் :———.

9. (i) ஏதேனும் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டுள்ளீர்களா ? : ———.

(ii) ஆம் எனில் அதுபற்றிய விபரங்கள் :———.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதியுரைக்கின்றேன். இங்கு குறிப்பிட்டுள்ள ஏதேனும் விடயம் பொய்யானது அல்லது பிழையானது என தெரிவுசெய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகுதியற்றவர் ஆக்கப்படுவேன் என்பதையும்,

நியமனத்தின்பின் தெரியவருமாயின் நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

———,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :———.

**விண்ணப்பதாரி அரச சேவையைச் சேர்ந்தவராயின்**
**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி ............................................................... இத்திணைக்களத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், அவர் இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க லாம்/விடுவிக்க முடியாது.

———,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :———.
பதவி :———.
திணைக்களம் :———.
(பதவி முத்திரையுடன்)
திகதி :———.

பின்னிணைப்பு 1

வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பாடத்திட்டப்பத்திரம், இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

(i) வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான, தாபனக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் அடங்கிய 02 மணித்தியால வினாப் பத்திரமொன்று : - 100 புள்ளிகள்

1. தாபனக்கோவை : II, III, IV, V, VIII, XII, XIII, XIV, XIX, XLVII, XLVIII

2. நிதி ஒழுங்குவிதிகள் : I, III அத்தியாயங்கள்

(ii) விடய அறிவு (நேரம் : 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்

* வீடியோ புகைப்படக் கருவி வகைகள் பற்றிய அறிவு
* புகைப்படக் கருவி கோணங்கள் பற்றிய அறிவு
* புகைப்படக் கருவி வில்லைகள் (lenses) பற்றிய அறிவு
* செய்திகள் சார்ந்த புகைப்படக் கலை பற்றிய அறிவு
* விசேடமான புகைப்பட கலை பற்றிய அறிவு
* அமைச்சின் வீடியோ புகைப்படக் கலைஞர் ஒருவருக்குரிய பொறுப்புக்கள்
* புகைப்படக் கருவியின் பாதுகாப்புத் தன்மை வழங்குவது பற்றிய அறிவு
* புகைப்படங்களை அச்சிடுதல் பற்றிய அறிவு
* புகைப்படங்களை பெற்றுக்கொள்வதற்காக மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளல்.

வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்துவதற்காக ஆகக்குறைந்தது ஒரு பாடத்திற்கு 40 புள்ளிகள் வீதம் பெற்றுக்கொள்ள வேண்டும். வயதை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறமைகாண் தடையிலிருந்து விடுவிக்கப்பட மாட்டாது.

7-261/3

---

## தொழில்சார், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்

**இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச்சேவை I ஆம் வகுப்பின் பதவிகள்**

தொழில்சார் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தின் இலங்கை தொழல்நுட்பக் கல்விச்சேவை I ஆம் வகுப்பு பதவிகள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற் கிணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் 2009.07.24 ஆந் திகதிக்கு முன் "நிபுணத்தா பியச, இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05 உள்ள தொழில்சார் தொழில்பயிற்சி அமைச்சு, செயலாளர்" இற்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை தொழில்நுட்பக் கல்விச்சேவை 1 ஆம் வகுப்பின் பதவிகள்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

*2.* **சேவை நிபந்தனைகளும் நியமன நியதிகளும்**.- (i) இப்பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் விதவைகள், அனாதைகள் இளைப்பாற்று நிதியத்திற்கு உதவுதொகைகள் செலுத்துமாறு வேண்டப் படுவர். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் அரச சேவையில் ஏற்கனவே நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் உரித்துடையதுமான பதவிகளை வகிக்காதவர்களாயின், சேவைக்கு ஏற்றவாறு, முதலில் மூன்று வருடத்திற்கு தகுதிகாண் நிலையில்/ தேர்வாய்வுக்குரிய நிலையில் நியமிக்கப்படுவர். அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையவருமான அரசாங்க அலுவலர் ஒருவர் தெரிவுசெய்யப் படுமிடத்து முதலில் அவர் ஒரு வருட கால பதிற்கடமை புரியும் அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) பதவியொன்றுக்கு நியமிக்கப்படும் ஒவ்வொரு அலுவலரும் நியமனம் பெறப்பட்ட தினம் தொடக்கம் மூன்று வருடத்திற்குள்ளாக உரிய வினைத்திறமைகாண் தடையைப் பூர்த்தி செய்தல் வேண்டும். குறிப்பிட்ட கால எல்லைக்குள் வினைத்திறமைகாண் தடையைப் பூர்த்தி செய்யாதோரது வருடாந்த சம்பள ஏற்றம் தடுத்து வைக்கப்படுவதுடன், வழங்கப்பட்ட கால எல்லை சம்பளவேற்றம் தடுத்துவைக்கப் பட்ட கால எல்லையெனக் கணிக்கப்படும். மேலும் இவ்வுத்தியோகத்தர் இவ்வினைத்திறமைகாண் தடையைப் பூர்த்திசெய்யும் வரைக்கும் இலங்கை தொழில்நுட்பக் கல்விச்சேவையில் வேறு எந்த உயர் பதவிகளுக்கும் விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவர்.

வினைத்திறமைகாண் தடை பின்வருவனவற்றை உள்ளடக்கிய பரீட்சையைக் கொண்டுள்ளதாக இருக்கும் :

(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை ஏற்பாடுகளும் அரசாங்க பிரமாணங்களும் ;

(ஆ) கணக்கியல் ;

(இ) கல்வி தொடர்பான சட்டம், நிருவாகமும் மேற்பார்வையும் ; அத்துடன்

(ஈ) இலங்கை தொழில்நுட்பக் கல்விச்சேவையின் பதவியில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள், நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருடத்திற்குள் இரண்டாம் மொழியில் தேர்ச்சிபெற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். இது பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 7/2007 இற்கு ஒருங்கமைவானது. உரிய காலத்திற்குள் தேர்ச்சிபெறத் தவறினால் சம்பள ஏற்றம் பிற்போடுவதற்கேதுவாகலாம். மொழித் தேர்ச்சி பெறவேண்டிய உத்தியோகத்தர்கள், க. பொ. த. (சா. த.) இல் பிரதான பாடமாக (1 ஆம் மொழி வரிசையில்) கொண்ட சிங்களம்/ தமிழ் மொழியை இரண்டாவது மொழித் தேர்ச்சிக்காக சித்திபெறல் வேண்டும். (விருப்புத் தேர்வுக்குரிய பாடம் அல்லது 2 ஆவது மொழி, இத்தேர்வில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.) அத்துடன் அரச கரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சை அல்லது விசேட திறன் பரீட்சை ஒன்றில் சித்திபெறல் வேண்டும்.

*3.* **சம்பளமும் கொடுப்பனவுகளும்**.- பொது நிர்வாகச் சுற்றறிக்கை SL-1-2006 இன்படி இப்பதவிகளுக்குரிய திரட்டிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 22,935-10X645-8X790-17X1,050-53,550 ஆகும். சம்பள ஏற்றக் கொடுப்பனவு 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு வினைத்திறமை காண் தடையில் சித்தி அடைவதற்குட்பட்டதாகும். 1 ஆம் வகுப்பிற்கு மாதாந்தம் ரூபா 36,755 என்னும் அளவு அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

*4.* **தேவையான தகைமைகள்**.- 2006.01.01 ஆந் திகதிக்கு முன்பாக ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகளை நிரூபிக்க திருப்தியான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும் :

4.1 அதிசிறந்த நற்குணமும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

4.2 விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவை/மாகாண சபை சேவையில் இருப்பவர்களுக்கு இவ்வுச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

4.3 (i) பட்டப்பின் கற்கைப் பட்டம் அல்லது பட்டப்பின் கற்கை டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான தகைமைகள் பெற்றிருத்தல் ;

அத்துடன்

(அ) இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் II ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் ஒரு வருட திருப்திகரமான சேவையை *பூர்த்திசெய்தவராகவும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும் ;

அல்லது

(ii) பட்டப்பின் கற்கைப்பட்டம் அல்லது பட்டப்பின் கற்கை டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான தகைமைகள் பெற்றிருத்தல் ;

அத்துடன்

(அ) தொழில்சார், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சின் கீழுள்ள எந்தவொரு நிறுவனத்திலும் பதவியைக் கொண்டுள்ள ஒருவர் 06/2006 சம்பள சுற்றறிக்கைக்கு அமைய SL-1 சம்பள நிலைக்கு உரித்தான பதவியொன்றினை வகித்து, அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட வரும் 2006.01.01 ஆந் திகதியில் ரூபா 30,965 இற்கு குறையாத சம்பளம் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) இலங்கை தொழில்நுட்பக் கல்விச்சேவை II ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப்* பூர்த்திசெய்தவராகவும் தனது பதவியில் நிரந்தரமாக்கப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

* திருப்திகரமான சேவைக்காலம் எனக் கருதப்படுவது யாதெனில் சென்ற 5 வருட காலப்பகுதிக்குள் சகல சம்பள உயர்வுகளையும் உரிய முறையில் பெற்றிருத்தல் மற்றும் எச்சரிக்கப்பட்டாலன்றி வேறு ஒழுக்காற்று தண்டனை எதுவும் பெற்றிராத காலமாகும்.

5. கீழ்க்காணும் ஆவணங்களில் ஒன்றையோ அன்றேல் யாவற்றையுமோ தேவைப்படும்போது சமர்ப்பிக்கப்படுவதற்கு ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஆயத்தமாக இருத்தல் வேண்டும் :-

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**மு. கு.**- சமயத் தீட்சை சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்படும் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.) ;

(ஆ) பட்டச் சான்றிதழ்கள் அல்லது கல்விச் சான்றிதழ்கள் ;

(இ) குணச்சான்றிதழ்கள் இரண்டு (அவற்றில் ஒன்று பல்கலைக்கழக பிரத்தியேக ஆசிரியரினால் அல்லது பேராசிரியரினால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.) ;

(ஈ) உயர் தொழில் திறன்சார் சான்றிதழ்கள் அத்துடன்/அல்லது தொழில்நுட்பத் தகைமைச் சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிகவுயர்ந்த பரீட்சை தொடர்பிலான சான்றிதழ்கள்.

**குறிப்பு**.- (i) விண்ணப்பப்படிவத்துடன் ஏதேனும் ஆவணத்தையோ அதன் பிரதியையோ இணைத்தலாகாது ;

(ii) ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படி வேண்டப்படும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரியின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க/கூட்டுத்தாபன சேவையிலுள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள/கூட்டுத்தாபன தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எவ்வாறாயினும் உரிய துறை/கூட்டுத்தாபனத் தலைவருக்கு உரிய தினத்திற்கு முன்பு கிடைக்கப்பெற்று தாமதத்திற்கு அவரால் தகுந்த காரணங்கள் காட்டப்பட்டு சிபாரிசு செய்யப்படுமிடத்து மாத்திரமே கவனத்திற்கொள்ளப்படும்.

7. விண்ணப்பங்கள் அல்லது அது சம்பந்தப்பட்ட வேறு உத்தியோகபூர்வ கடிதங்கள் தொழில்சார் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சின் செயலாளரின் பதவிப்பெயருக்கு முகவரியிடப்பட வேண்டுமேயன்றி, வேறெந்தவொரு அலுவலரினது தனிப்பட்ட பெயருக்கு அனுப்பப்படலாகாது.

8. இந்த வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) வின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளும் மற்றும் 1986.08.15 ஆந் திகதிய 415 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க வர்த்தமானியின் பகுதி I பொது இல் பிரசுரமாகிய இலங்கை தொழில்நுட்ப கல்விச்சேவை தொடர்பிலான பிரமாணக் குறிப்புகளுக்கும் காலத்துக்குக்காலம் ஏற்படும் மாற்றத்திற்கும் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

9. இலங்கை தொழில்நுட்பக் கல்விச்சேவையின் பிரமாண விதிகளுக்கமைய இலங்கை தொழில்நுட்பக் கல்விச்சேவை I ஆம் வகுப்பிற்கான நியமனமானது, வாய்மொழிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். சேவை மூப்புக்கும் உயர் தகுதிக்கும் புள்ளிகள் வழங்கப்படும்.

பி. கபன்கம,
செயலாளர்,
தொழில்சார், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு.

தொழில்சார், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு,
"நிபுணத்தா பியச",
இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05.
2009. ............................

மாதிரி விண்ணப்பப்படிவம்

(ஏ4 (8 1/2" x 13 1/2") அளவிலான தாளில் தயாரிக்கப்படல் வேண்டும்)

**தொழில்சார், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு**

**தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்**

*இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவை I ஆம் வகுப்பு பதவி*

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) :———.
2. முழுப்பெயர் :———.
3. அலுவலக முகவரி :———.
4. சொந்த முகவரியும் தொலைபேசி இலக்கமும் :———.
5. (அ) நீர் ஒரு இலங்கைப் பிரசையா ? :———.
   (ஆ) அப்படியாயின் வம்சாவழியினாலா ? பதிவினாலா ? :———.
6. பிறந்த திகதி :

ஆண்டு : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

7. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் : [ ][ ] மாதங்கள் : [ ][ ] நாட்கள் : [ ][ ]

8. தற்போதைய பதவியும் விபரங்களும் :

   (அ) பதவியும் நியமனத் திகதியும் :———.
   (ஆ) நிரந்தரமானதா ? அல்லது தற்காலிகமானதா ? :———.
   (இ) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா ? இல்லையா ? :———.
   (ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றீரா ? :———.
   (உ) திணைக்களம் :———.
   (ஊ) நிறுவனம்/வேலை செய்யுமிடம் :———.
   (எ) வருடாந்த திரட்டிய சம்பள அளவுத்திட்டம் :———.
   (ஏ) தற்போதைய வருடாந்த சம்பள அளவுத்திட்டம் :———.

9. உயர் கல்வித் தகைமைகள் தொடர்பான விபரங்கள் :
   (பட்டப்படிப்பு, பட்டப்பின் கற்கைப் பட்டம் டிப்ளோமா)

| நிறுவனம்/ பல்கலைக் கழகம் | பட்டப்படிப்பு/பட்டப்பின் கற்கைப் பட்டம் டிப்ளோமா | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

10. உயர்தொழில் திறன்சார் தகைமைகள் பற்றிய விபரங்கள் :

| தராதரப்பத்திரம் | வழங்கிய நிறுவனம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

11. இடைத்தர (இரண்டாம்) கல்வித் தகைமைகள் :
    க. பொ. த. (சா. த.) க. பொ. த. (உ. த.)

| பரீட்சை க. பொ. த. (......) | வருடம் | பாடங்கள் | சித்திபெற்ற தரம் |
|---|---|---|---|
| | | | |

12. உயர்தொழில் திறன்சார் கல்வி பயின்ற நிறுவனங்கள் :

| நிறுவனம் | கற்கைநெறி | இருந்து | வரை |
|---|---|---|---|
| | | | |

13. முன்னைய நியமனங்கள் (சரியான காலவரையறை ஒழுங்கில் திகதியுடன் குறிப்பிடவும்.) :

| பதவி | நிறுவனம் | இருந்து | வரை |
|---|---|---|---|
| | | | |

14. இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவை அலுவலர் ஒருவராயின், வினைத்திறமைகாண் தடையைப் பூர்த்திசெய்துள்ளாரா ? பூர்த்திசெய்துள்ளாராயின் (i) பூரணப்படுத்திய வருடத்தையும் (ii) மேற்கூறப்பட்ட சான்றிதழ் வகையையும் குறிப்பிடுக :———.

15. உமக்கு எதிராக சட்ட நீதிமன்றத்தில் யாதேனும் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அப்படியாயின் விபரங்கள் தருக :———.

16. அரசாங்க திணைக்களமொன்றில் அல்லது சபை/கூட்டுத்தாபன மொன்றில்/ சேவையாற்றியிருப்பின் அச்சேவையிலிருந்து விலக்கப்பட்டதற்கு, விலகியதற்கான காரணம் :———.

17. உமக்கு எதிராக ஏதாயினும் ஒழுக்காற்று சம்பந்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா ? (அப்படியாயின் அதன் விபரத்தைச் சுருக்கமாகத் தருக.) :———.

18. நீர் பணமுட்டு அற்றவரா ? அப்படியில்லாவிடின் பணமுட்டு எவ்வளவு :———.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமெனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவு செய்யப்படுவதற் முன்பு கண்டுபிடிக்கப்பட்டால் தகுதியற்றவராக்கவும் நியமனத்தின் பின்பு கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கும் பாத்திரமாவேன் எனவும் அறிவேன்.

———,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :———.

**திணைக்களத் தலைவரின் விதப்புரை**

———,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :———.

7-295

---

## இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

உதவி பொலிஸ் பரிசோதகர் பதவி

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் உதவி பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), ஆட்சேர்ப்பு அலுவலகம், 2 ஆம் மாடி, புதிய செயலகக் கட்டிடம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உதவி பொலிஸ் பரிசோதகர் " எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2009.09.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**-ரூபா 1,90,200 - 7 x 2,160 - 2 x 2,880- 8 x 3,840 - 17 x 4,500 - ரூபா 3,18,300

மேற்கூறப்பட்ட சம்பள அளவுத்திட்டத்துக்கு மேலதிகமாக கீழ்க்காணும் படிகள் மாதம் தோறும் வழங்கப்படும் :-

(அ) விசேட கடினப்படி:

(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 1,200;
(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 600.

(ஆ) இணைந்த படிகள்:

(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 12,000;
(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 4,000.

(அ) இலவச பயண வசதி ;
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய சிகிச்சை பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும்;
(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்;
(ஈ) விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு உதவிகள் வழங்கப்படும்;
(உ) கடமைக்கான பிரயாணச் செலவுகள் கஷ்டமான சேவைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளை நிறைவு செய்வதற்காகவும் வெகுமதி யாகவும் பணம் வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை :

* வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பமுடிவுத் திகதியில் 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் உத்தியோகத்தர்களுக்கும், பாதுகாப்பு உத்தியோ கத்தர்களுக்கும் (SA) விண்ணப்ப முடிவு திகதி அன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள் :

- க.பொ.த. (சா.தர) பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- க.பொ.த. (உ. தர) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியெய்திருக்கவும் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின் படி பாடங்களின் எண்ணிக்கையை கணக்கில் எடுக்கும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ.த.(சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.-** க.பொ.த. (சா.தர) பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாததாக கருதப்படும்.

**குறிப்பு 3.-** விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்கள பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்படமாட்டாது.

(இ) பௌதிக தகைமைகள் :

உயரம் : 5 அடி 6 அங். (ஆகக் குறைந்தது)
மார்பு : 32 அங். ஆகக் குறைந்தது (மூச்சுவிட்ட நிலையில்)

**குறிப்பு 1.-** சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரமும், மார்பளவும் குறைவாக இருப்பினும் அவர் பிற தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிவின்படி ஆட்சேர்க்கும் பொருட்டான தகைமையை அவர் பெறுவார்.

(ஈ) பார்வை தொடர்பான தேவை :

ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவர்.

(உ) பிற தகைமைகள் :

விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் இது ஏற்புடையதாகாது.

**5. ஆட்சேர்ப்பு முறை.-** தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்ப தகைமைகள் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். இதில் சித்தியடைபவர்கள் மாத்திரம் கீழ்வரும் உடற்பயிற்சிகளில் பங்குபற்றலாம் அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

(1) 1000 மீற்றர் - 3 நிமிடங்கள் 14 விநாடிகள்

- பரீட்சையில் சித்தியெய்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முக பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

***எழுத்து பரீட்சை.-***

* எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை அடக்கி உள்ளது;
* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்கு குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல்;
* பொது அறிவும் பொது நுட்பமும் (01 மணித்தியாலம்.)

**6. வைத்திய பரீட்சை :**

- ஆகக்கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையும் உடைய விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன் வைத்திய பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சையில் சித்தி பெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

**7. பின்னணி விசாரணை.-** (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தை தொடர்பாக, அவர் தொடர்பாகவும் கிட்டிய உறவினர்களதும், நண்பர்களினதும் நடத்தை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படும். துர் நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய் தகவல்கள் கொடுப்பது அவரை ஆட்சேர்ப்பதற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் பொய்யான தகவல் கொடுத்துள்ள விடயம் வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

**8. அரச மொழி தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல் :**

- பொது நிர்வாக உள்ளூர் ஆட்சி அமைச்சினால் 07/2007 என்ற இலக்கமும் 2007.04.28 ஆந் திகதி பொது நிர்வாகத்தினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தினதும் பிரகாரம் அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்க்கப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெற்றல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப் படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

- நியமன திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் சம்பள ஏற்றம் தேர்ச்சியடையும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

**9. பதவிக்கமர்த்தல் நியதிகள்.-** இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குட்பட்டது. விதவைகள்/விபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு சந்தாப்பணம் கொடுத்தல் வேண்டும்.

**10. சேவை நிபந்தனைகள்.-** (அ) நியமனம் 3 ஆண்டு காலத்துக்கு தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை விளைவுறும் முகமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக்கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக்

கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்கு தகுதியற்றவர் எனக் கருதப் படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய இயலாது. எனினும் 1973.02.28 ஆந் திகதி உடையதன் 41 ஆம் இலக்கமும் கொண்ட பகுதி II பொலிஸ் வர்த்தமானியின் பிரகாரமும் 1952/2006 என்ற இலக்கமும் 2006.10.19 ஆந் திகதியும் 2007.08.09 (திருத்தப்பெற்றது) ஆந் திகதியினுடைய பொலிஸ்மா அதிபரின் சுற்றுநிருபத்தின் பிரகாரமும் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை முதலியவற்றிற்காகவும் செய்த செலவினங்கள் பொருட்டு விதிக்கப்படும் பணத்தொகையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பணத் தொகை இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் கணிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். பதவி விலகல்களை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியின் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(எ) தகுதிகூர்நிலை உதவிப் பொலிஸ் பரிசோதகர், பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபால், பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி பொலிஸ் நன்னடத்தைக் கோவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஏ) தகுதிகூர்நிலை உதவிப் பொலிஸ் பரிசோதகர், பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபால், பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) தகுதிகூர்நிலை உதவிப் பொலிஸ் பரிசோதகர், பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைகளை சான்றுபடுத்தும் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;

(உ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்);

(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

13. (அ.) எனவே அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11"x3" அளவுத் தாளிலான விண்ணப்பத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பகாரர்களுக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

உதவி பொலிஸ் பரிசோதகர் பதவி

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பதாரியின் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் -
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையமும், தேர்தல் மாவட்டமும் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருபவர்கள் பிறந்த இடத்தைக் குறிப்பிடவும் :-
(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பதாரரின் வயது :-
(விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. வேறு ஏதேனும் விசேட தகுதிகள் /தகைமைகள் உண்டா ?

11. திருமணம் ஆனவரா? திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை படைதாங்கு சேவையின் அங்கத்தவரா ? : -----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடிய உறவினர் அல்லாத இரு நபர்களின் பெயர்களையும் முகவரிகளையும் தருக. :-----.

(அ) -----.
(ஆ) -----.

15. (அ) இலங்கைப் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்ததுண்டா? (அவ்வாறாயின்) இது தொடர்பான விபரங்களைத் தருக :-----.

(ஆ) இதற்கு முன்பு நீங்கள் இலங்கைப் பொலிஸில் அல்லது இலங்கை உப சேவைப் பொலிஸில் சேவை செய்துள்ளீரா? அவ்வாறாயின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைத் தருக? :-----.

16. (அ) தற்போதைக்கு படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அதிலிருந்து விலகிய போது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்: -----.

17. படைதாங்கு சேவையின் தொண்டர் அணியில் இருந்துள்ளீரா? அல்லது இருக்கின்றீரா? அவ்வாறு இருந்திருந்தால் படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.

18. நீங்கள் எப்போதாவது அரசாங்கத்தின் கீழ் சேவையாற்றியுள்ளீர்களா? அவ்வாறாயின் நீங்கள் சேவையாற்றிய காலப்பகுதி திணைக்களம், பதவி ஆகியவற்றின் விபரங்களைத் தருக. :-----.

19. நீங்கள் ஏதாவது ஒரு குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப் பட்டோ அல்லது தண்டனை கொடுக்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் விபரங்களைத் தருக. :-----.

20. நீங்கள் அல்லது உங்கள் உறவினர் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டு அல்லது குற்றம் சுமத்தப்பட்டு அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பின் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

7-303

## இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிகள் - விசேட அதிரடிப்படை

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பெண்பொலிஸ் கொஸ்தாபல் விசேட அதிரடிப்படை பதவிகளுக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), ஆட்சேர்ப்பு அலுவலகம், 2 ஆம் மாடி, புதிய செயலகக் கட்டிடம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "பெண் பொலிஸ் கொஸ்தாபல் -விசேட அதிரடிப்படை" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் 2009.09.10 ஆந் திகதியன்று அல்லது அதற்குமுன் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

**3. சம்பள அளவுத்திட்டம்.**- பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி.- ரூபா 1,71,360 - 7 X 1,740 - 10 X 2,160 - 17 X 2,880 - ரூபா 2,54,100

மேற்கூறப்பட்ட சம்பள அளவுத்திட்டத்துக்கு மேலதிகமாக கீழ்க்காணும் படிகள் மாதம் தோறும் வழங்கப்படும்:-

(அ) விசேட கடினப்படி:

(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 1,200;
(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 600.

(ஆ) இணைந்த படிகள்:

(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 10,500;
(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 3,500.

அ. இலவச பயண வசதி ;

ஆ. உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய சிகிச்சை பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும்;

இ. சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்;

ஈ. விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு உதவிகள் வழங்கப்படும்;

உ. கடமைக்கான பிரயாணச் செலவுகள் கஷ்டமான சேவைகளுக் காகவும் அத்துடன் திறமையான கடமைகளை நிறைவு செய்வதற்காகவும் வெகுமதியாக பணம் வழங்கப்படும்.

**4.தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை:

* **தகுதிகூர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி.**- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பமுடிவுத் திகதியில் 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள் :

- தகுதிகூர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம், தாய்மொழி அடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரு தடவைகளில் சித்தியெய்தியவர்கள் முதல் தடவையில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை கணக்கில் எடுக்கும் போது விஞ்ஞான பாடஇலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.**- க.பொ.த.(சா.தர) பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல் முறைப்பரீட்சையில் சீத்தியடைந்திருந்த போதும் அப்பாடத்தில் சித்தியடையாததாக கருதப்படும்.

**குறிப்பு 3.**-விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்கள பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) பௌதிக தகைமைகள் :

தகுதி கூர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி
உயரம் : 5 அடி 2 அங். (ஆகக் குறைந்தது)

**குறிப்பு.**- சிறந்த விளையாட்டுத்திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமைகாட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரமும், மார்பளவும் குறைவாக இருப்பினும் அவர் பிற தேவைகளை பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிவின் படி ஆட்சேர்க்கும் பொருட்டான தகைமையை அவர் பெறுவார்.

**பார்வை தொடர்பான தேவை.**- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவர்.

ஈ. பிற தகைமைகள் :

விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் இது ஏற்புடையதாகாது.

**5. ஆட்சேர்ப்பு முறை.**- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்ப தகைமைகள் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். இதில் சித்தியடைபவர்கள் மாத்திரம் கீழ்வரும்உடற் பயிற்சிகளில் பங்கு

பற்றலாம் அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும் :

(1) 1000 மீற்றர் - 5 நிமிடங்கள் 14 விநாடிகள்

- பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் மாத்திரம் இறுதி நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முக பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

*** எழுத்துப் பரீட்சை :-**

* எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை அடக்கி உள்ளது ;

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்கு குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல்;

* பொது அறிவும் பொது நுட்பமும் (1 மணித்தியாலம்)

**6. வைத்திய பரீட்சை :**

- ஆகக்கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையும் உடைய விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன் வைத்திய பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சையில் சித்தி பெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

**7. பின்னணி விசாரணை.-** (அ) விண்ணப்பதாரியின் நன் நடத்தை தொடர்பாக, அவர் தொடர்பாகவும் கிட்டிய உறவினர்களதும், நண்பர்களினதும் நடத்தை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப் படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய் தகவல் கொடுப்பது அவரை ஆட்சேர்ப் பதற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் பொய்யான தகவல் கொடுத்துள்ள விடயம் வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப் படுவர்.

**8. அரச மொழி தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல் :**

- பொது நிர்வாக உண்ணாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2007.04.28 ஆந் திகதிய 07/2007 என்ற இலக்கம் கொண்ட பொது நிர்வாக சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்க்கப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து 5 வருடத்திற் குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

- நியமன திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் சம்பள ஏற்றம் தேர்ச்சியடையும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

**9. பதவிக்கமர்த்தல் நியதிகள்.-** இப்பதவி நிரந்தரமானது ஓய் வூதியத்திற்குட்பட்டது. விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு சந்தாப்பணம் கொடுத்தல் வேண்டும்.

**10. சேவை நிபந்தனைகள்.-** (அ) நியமனம் 3 ஆண்டு காலத்துக்கு தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை விளைவுறும் முகமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளின் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்கு தகுதியற்றவர் என கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய இயலாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பகுதி II பொலிஸ் வர்த்தமானியின் பிரகாரமும், 1952/2006 என்ற இலக்க 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 2007.08.09 (திருத்தப்பெற்றது) ஆந் திகதியிட்ட பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட கால தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை முதலியவற்றிற்காகவும் செய்த செலவினங்கள் பொருட்டு விதிக்கப்படும் பணத்தொகையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பணத் தொகை இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் கணிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். பதவி விலகல்களை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியின் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(எ) பெண் பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி பொலிஸ் நன்னடத்தைக் கோவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஏ) பெண் பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு அமைந்தொழுகு வதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஓ) பெண் பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகாது).

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;

(இ) கல்வித் தகைமைகளை சான்றுபடுத்தும் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;

(உ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்);

(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

14. (அ) எனவே அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 3" அளவுத் தாளிலான விண்ணப் பத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத் தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பகாரர்களுக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி - விசேட அதிரடிப் படை

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பதாரியின் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(தேசிய அடையாள அட்டையின் பிரதியை இணைக்கவும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையமும், தேர்தல் மாவட்டமும் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருப வர்கள் பிறந்த இடத்தைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரின்தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பதாரரின் வயது :- (விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. வேறு ஏதேனும் விசேட தகுதிகள் /தகைமைகள் உண்டா ? :-----.

11. திருமணம் ஆனவரா? திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் இலங்கை படைதாங்கு சேவையின் அங்கத்தவரா ?

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள் உண்டா ?:-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடிய உறவினர் அல்லாத இரு நபர்களின் பெயர்களையும் முகவரிகளையும் தருக:-

(அ) -----.
(ஆ) -----.

15. (அ) இலங்கைப் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்ததுண்டா? (அவ்வா றாயின்) இது தொடர்பான விபரங்களைத் தருக :-----.

(ஆ) இதற்கு முன்பு நீங்கள் இலங்கைப் பொலிஸில் அல்லது இலங்கை உப சேவைப் பொலிஸில் சேவை செய்துள்ளீரா? அவ்வாறாயின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைத் தருக? :-----.

16. (அ) தற்போதைய படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அதிலிருந்து விலகிய போது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.

17. படைதாங்கு சேவையின் தொண்டர் அணியில் இருந்துள்ளீரா? அல்லது இருக்கின்றீரா? அவ்வாறு இருந்திருந்தால் படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.

நீங்கள் எப்போதாவது அரசாங்கத்தின் கீழ் சேவையாற்றியுள்ளீர்களா? அவ்வாறாயின் நீங்கள் சேவையாற்றிய காலப்பகுதி திணைக்களம், பதவி ஆகியவற்றின் விபரங்களைத் தருக:-----.

18. நீங்கள் ஏதாவது ஒரு குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டோ அல்லது தண்டனை கொடுக்கப்பட்டுள்ளீரா?அவ்வாறாயின் விபரங்களைத் தருக :-----.

20. நீங்கள் அல்லது உங்கள் உறவினர் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டு அல்லது குற்றம் சுமத்தப்பட்டு அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

7-304

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, ஆவணி மாதம் 10 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009, ஆனி 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | ஊவா பரனகம | உடுகிந்த பிரிவு விவாக (கண்டி/ பொது) மற்றும் பம்பரப பிரிவு பிறப்பு இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , பதுளை |

7-167

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

## இலங்கைப் பொறியியலாளர் சேவைக்கு பொறியியலாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2009

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1606 ஆம் இலக்க 2009.06.12 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர் சேவைக்கு பொறியியலாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் விண்ணப்ப முடிவுத் திகதியானது 2009.08.28 ஆந் திகதியாக மாற்றியமைக்கப்படுகின்றது.

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2009.06.25.

7-339

---

## இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் வகுப்பு II பிரிவு "ஆ" மற்றும் வகுப்பு II பிரிவு "அ" வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2009

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்பிற்கு ஏற்ப 2004, 2005, 2006, 2007, 2008, 2009 ஆகிய வருடங்களுக்காக மேற்படி பரீட்சைகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2009, ஒற்றோபர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப்பரீட்சைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன் இப்பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பில் அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

(ii) இச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாகுதல் வேண்டும். பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள விதிகள், வர்த்தமானி அறிவித்தலின் தொடக்கத்தில் வேறாக அச்சடிக்கப்பட்டுள்ளது.

3. இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரிப் படிவத்திற்கு அமைய பரீட்சார்த்திகள் தத்தம் விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அதன்படி அரசாங்க சேவை அலுவலர்களாயின் தமது திணைக்கள தலைவர்கள் ஊடாகவும் மாகாண அரச சேவையின் அலுவலர்களாயின் அவர்கள் சேவையாற்றும் மாகாண சபையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும் 2009, ஒகத்து 07 ஆந் திகதிக்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்புக்கள், வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு தமது விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பங்களை முன்வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. **அடையாள அட்டைகள்**.- பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்திப்படும் வண்ணம் தமது அடையாளத்தை பரீட்சார்த்திகளினால் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

மேற்படி ஆவணங்களில் ஒன்றையாவது முன்வைக்க இயலாத விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

5. **விண்ணப்பப்படிவம்**.- (i) ஏ4 அளவிலான ஒரு தாளில் விண்ணப்பத்தை தயாரித்தல் வேண்டும். இல. 1 முதல் 3 வரையிலான பந்திகளை முதலாம் பக்கத்திலும் ஏனையவற்றை மறுபக்கத்திலும் உள்ளடக்குதல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் பொறிக்கப் படினும் கூட, அதை சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் கையெழுத்தினாலேயே நிரப்பப்படுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பத்தை நிரப்புதல் வேண்டும்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதற்கு அடுத்த தடவைகளில் அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ரூபா 90 பெறுமதியான முத்திரைகளையும், ஒரு பாடத்திற்கு மாத்திரம் தோற்றுவதாயின் ரூபா 50 பெறுமதியான முத்திரைகளையும்

விண்ணப்பத்தில் ஒட்டி தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அவற்றை பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீள செலுத்தப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காக செலுத்தப் படும் கட்டணத்தை வேறு எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) பரீட்சார்த்திகளுக்கு தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காக பரீட்சார்த்திகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் விண்ணப்பித்தால் அம் மும்மொழிகளிலும் பரீட்சை நடாத்தப் படுவதுடன் பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற எல்லா வினாத் தாள்களுக்கும் ஒரே மொழியில் பதிலெழுதுதல் வேண்டும்.

(iii) ஓர் அலுவலர் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே தடவையில் தோற்ற முடியாது. எனினும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் ஐந்து வருட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்து முதலாம் வினைத்திறன்காண் தடையில் சித்தியெய்திய வகுப்பு II பிரிவு "ஆ" வின் அலுவலர்கள் வகுப்பு II பிரிவு "அ" வின் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்குத் தோற்றலாம். அவ்வாறான விண்ணப்பதாரர்கள் இரண்டு பரீட்சைக்கும் இரண்டு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் அனுப்பியுள்ள சகல அலுவலர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேரசூசிப் பிரதியுடன் அனுமதி அட்டையும் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் தமது கையொப்பம் உறுதிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறானதொரு அனுமதி அட்டை இல்லாது பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்பட மாட்டாது. பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை தினத்திற்கு குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அதுபற்றி உடனடியாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்புக்கள், வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு (தந்தி முகவரி : பரீட்சை, கொழும்பு) பின்வரும் விபரங்களுடன் தெரியப்படுத்தல் வேண்டும் :

(1) பரீட்சையின் பெயர்
(2) பரீட்சார்த்தின் முழுப்பெயர்
(3) முகவரி
(4) விண்ணப்பம் அஞ்சல் செய்யப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவுசெய்யப்பட்ட இலக்கம், அனுப்பிய திகதி

7. மேற்படி (06) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளினால் பின்னராக அனுப்பப்படும் ஆவணங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

8. அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறாகவும் ஒவ்வொன்றுக்கு வேறுபட்ட தடவைகளிலும் தோற்றலாம். எனினும் சித்திபெறுவதற்காக ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளையாவது பெறுதல் வேண்டும்.

9. பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல்.- இலக்கம் 03 இன்கீழ் மாகாண அரசசேவை அலுவலர்களின் பெறுபேறுகள் உரிய மாகாண அரசசேவை ஆணைக்குழுவின் செயலாளரிடமும், அரசாங்க சேவை அலுவலர்களின் பெறுபேறுகள் உரிய அமைச்சு செயலாளரிடமும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **பரீட்சைத் திட்டம்**.- (1) வகுப்பு II பிரிவு "ஆ" ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வரும் 2 வினாத்தாள்களைக் கொண்டமைந்திருக்கும் :

(1) அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (காலம் : 2 மணித்தியாலம்) (பாட எண் 01) — 100 புள்ளிகள்
(2) நிதி ஒழுங்குவிதிகள் (காலம் : 2 மணித்தியாலம்) (பாட எண் 02) — 100 புள்ளிகள்

முதலாம் வினாத்தாளுக்கான பாடவிதானம்.- அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (பாட இலக்கம் 01)

இவ்வினாத்தாள் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களைக் கொண்டமைந்திருக்கும் :

| | |
|---|---|
| அத்தியாயம் II | சேவைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் நியமனம் |
| அத்தியாயம் III | இடமாற்றங்கள் |
| அத்தியாயம் IV | மாதச் சம்பளம், தற்காலிக நிலை, நிரந்தரம் மற்றும் ஓய்வூதியங்களுக்கான உரித்துடைமை |
| அத்தியாயம் V | விடுவிப்பு, மீள சேவைக்கு அமர்த்துகை, சேவை முடிவுறுத்தல் |
| அத்தியாயம் VIII | மேலதிக நேரப்படிகள், விடுமுறை நாட்களும், விடுமுறை நாள்களுக்கான சம்பளங்களும் படிகளும் |
| அத்தியாயம் XII | விடுமுறை |
| அத்தியாயம் XIII | புகையிரத ஆணைச்சீட்டுக்கள் |
| அத்தியாயம் XIV | தீவுக்குள் கடமை நிமித்தமான பிரயாணங்கள் |
| அத்தியாயம் XIX | அரசாங்க வாசஸ்தலங்கள் |
| அத்தியாயம் XLVII | பொது நடத்தையும் ஒழுக்கமும் |

இரண்டாவது வினாத்தாளுக்கான பாடவிதானம்.- நிதி ஒழுங்குவிதிகள் (பாட இலக்கம் 02)

இவ்வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளின் பின்வரும் அத்தியாயங்களைக் கொண்டமைந்திருக்கும் :

(1) அத்தியாயம் I.- செலவின, வருமான மதிப்பீடுகள் திரட்டிய நிதி, வருடாந்த மதிப்பீடுகள், வருடாந்த மதிப்பீடுகளின் மாற்றங்கள் (நி. ஒ. 1-68 வரை)

(2) அத்தியாயம் III.- நிதி முகாமையும் பொறுப்புக்களும், பிரதான கணக்கீட்டு அலுவலர்கள், கணக்கீட்டு அலுவலர்கள், அரசிறை கணக்கு அலுவலர்கள் கொடுப்பனவுக்காக அதிகாரமளித்தல், அங்கீகாரம் வழங்குதல், உறுதிப்படுத்தல் அதிகாரங்களைக் கையளித்தல் (நி. ஒ. 124-147 வரை)

(2) வகுப்பு II பிரிவு "அ" வைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வரும் 2 வினாத்தாள்களைக் கொண்டமைந்திருக்கும் :

(அ) அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (காலம் : 2 மணித்தியாலம்) (பாட எண் 03) — 100 புள்ளிகள்
(ஆ) நிதி ஒழுங்குவிதிகள் (காலம் : 2 மணித்தியாலயம்) (பாட எண் 04) — 100 புள்ளிகள்

***முதலாம் வினாத்தாளுக்கான பாடவிதானம்.***- அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (பாட இலக்கம் 03)

இவ்வினாத்தாள் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களைக் கொண்டமைந்திருக்கும் :

| | |
|---|---|
| அத்தியாயம் XV | கற்கை நெறி, பயிற்சி அல்லது கடமையிலான வெளிநாட்டுப் பயணம் |
| அத்தியாயம் XVI | விடுமுறை பிரயாணங்கள் |
| அத்தியாயம் XXIII | குறிப்பிட்ட வகை நோய்களால் பீடிக்கப்பட்டிருக்கும் அரசாங்க அலுவலர்கள் சம்பந்தமான விசேட சலுகைகளும் அதுபற்றிய நிபந்தனைகளும் |
| அத்தியாயம் XXIV | சம்பளக் கடன்களும் முற்பணங்களும் |
| அத்தியாயம் XXV | தொழிற்சங்க உறுப்பினர்களுக்கான சலுகைகள் |
| அத்தியாயம் XXVII | கடிதத் தொடர்பு வழிமுறைகள் |
| அத்தியாயம் XXVIII | நிர்வாக நடைமுறைகளும் நியதிகளும் |
| அத்தியாயம் XXX | அரச அலுவலர்கள் மீதான அரசாங்கத்தின் அதிகாரங்கள் |
| அத்தியாயம் XXXIII | சட்ட ஆலோசனையும் சட்ட நடவடிக்கைகளும் |
| அத்தியாயம் XLVII | பொதுவான நடத்தைகளும் ஒழுக்கமும் |
| அத்தியாயம் XLVIII | ஒழுக்காற்று நடவடிக்கைமுறை விதிகள் |

அலுவலர்களின் செயலாற்றுகை, மதிப்பீடுகள் பற்றிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் ஏற்புடையதாகும்.

***இரண்டாவது வினாத்தாளுக்கான பாடவிதானம்.***- நிதி ஒழுங்குவிதிகள் (பாட இலக்கம் 04)

இவ்வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளின் பின்வரும் அத்தியாயங்களைக் கொண்டமைந்திருக்கும் :

(1) அத்தியாயம் VI.- அரசாங்க நிதி முதலியவற்றிற்கான பொறுப்பு, கட்டுநிதியும் வங்கிக் கணக்குகளும், அரசாங்க நிதிப் பாதுகாப்பு, மீளாய்வு சபைகள், மேலதிகப்பற்று, வங்கிக் கணக்குகள் (நி. ஒ. 315-396 வரை)

(2) அத்தியாயம் XIII.- வழங்கல்கள், வேலைகள், சேவைகள் : வழங்கல்கள்-கொள்வனவுச் செயற்பாடு, பண்டசாலை மீளாய்வுகள், பண்டசாலைப் படுத்தல் ஒப்பந்தங்கள் கேள்வி நடைமுறை (நி. ஒ. 708-755 வரை)

11. இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயத்திலும் அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

டி. திசாநாயக்க,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2009.06.22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் வகுப்பு II பிரிவு 'ஆ' மற்றும் வகுப்பு II பிரிவு 'அ' வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2009**

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
(சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4) [ ]
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :———.
(முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்)
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உதா. : (SILVA, A.B)

(ஆ) முழுப்பெயர் :———.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் :———.
(சிங்களத்தில்/தமிழில்)

(ஈ) அலுவலக முகவரி :———.
(ஆங்கிலத்தில்/தமிழில்)
(பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இம்முகவரிக்கு அனுப்பப்படும்.)

(உ) பால் (ஆண்/பெண்) : (ஆண்-0, பெண்-1) [ ]
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

(ஊ) நீங்கள் விண்ணப்பிக்கும் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை :
(II "ஆ" – 0, II "அ" – I) [ ]
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

**குறிப்பு**.- வர்த்தமானி அறிவித்தலில் பந்தி 5 (III) இன்படி இரண்டு பரீட்சைக்கும் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்திருப்பின் அதற்காக இரண்டு விண்ணப்பங்கள் முன்வைக்கப்படுதல் வேண்டும்.

2. நீங்கள் மாகாண அரச சேவையைச் சார்ந்தவரா ? அல்லது அரச சேவையைச் சார்ந்தவரா ? ☐

(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

(அரசாங்க சேவை – 1, மேல் மாகாணம் - 2, தென் மாகாணம் - 3, மத்திய மாகாணம் - 4, வடமேல் மாகாணம் - 5, சப்பிரகமுவ மாகாணம் - 6, ஊவா மாகாணம் - 7, வடமத்திய மாகாணம் - 8, வடகிழக்கு மாகாணம்-9)

3. தோற்றும் பாடம்/பாடங்கள் :

(அ) வகுப்பு II "ஆ" பிரிவின்/வகுப்பு II "அ" பிரிவின் வினைத் திறன்காண் தடைப்பரீட்சைக்காக தோற்றும் பாடங்கள் (ஏற்புடையதாகாத சொற்களை கீறிவிடவும்) :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| ——— | ☐ |
| ——— | ☐ |

4. (i) பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ii) 2008.12.31 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

5. (i) பதவிப் பெயர் :———.

(ii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பும் தரமும் (II "அ"/"ஆ" என்ற வகையில் உள்ளடக்க வேண்டும்.) : ———.

(iii) 2008.12.31 ஆந் திகதிக்கு அத்தரத்தின் சேவைக்காலம் : ———.

6. நீங்கள் எத்திணைக்களத்தைச் சேர்ந்தவர் :———.

பரீட்சைக்கு முதல் தடவையாக தோற்றாதுவிடின்,

| |
|---|
| ஒரு பாடத்திற்காக 50 ரூபா பெறுமதியான முத்திரைகளையும் முழுப் பரீட்சைக்காக 90 ரூபா பெறுமதியான முத்திரைகளையும் ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு பெறுமதி நீக்கம் செய்யவும். |

7. மேற்போந்த விபரங்கள் சரியானவை எனவும் மேற்காட்டப் பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையேன் என்றும் வெளிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிவேன் என்றும் வெளிப்படுத்துகிறேன்.

———,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :———.

**குறிப்பு.**- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக் களத்தில் அவர் சார்பாக அதிகாரம்பெற்றுள்ள அலுவலர் அல்லது தமது பிரதேச தலைவர் முன்னிலையில் தனது கையொப்பத்தை இடவேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலரும் நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவருமான திரு./ திருமதி/ செல்வி ......................... .............................................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதிப்படுத்துகிறேன்.

———,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

மேற்போந்த இல. 1 முதல் 6 வரையான பந்திகளில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் சரியானவை என்றும் இப்பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் என்றும் அவரால் தரப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுடையவர் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

———,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப்பெயரும்.

திகதி :———.

7-194

---

## அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – 2009 (1)

2004.12.24 ஆந் திகதிய 1372/23 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 5.2 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2009, ஒற்றோபர் மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்காக இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருணாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்களுக்கு ஏற்புடையதான நகர இலக்கங்கள் பின்குறிப்பிடப்படுகின்றன. போதிய அளவிலான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காது இருப்பின் அல்லது வேறு ஏதேனும் காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச்

செய்து பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்புப்படி அந்நிலையத்தைத் தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்திருக்கும்.

| நகரம் | | நகர இலக்கம் |
|---|---|---|
| கொழும்பு | - | 01 |
| கண்டி | - | 02 |
| காலி | - | 03 |
| மாத்தறை | - | 04 |
| யாழ்ப்பாணம் | - | 05 |
| மன்னார் | - | 06 |
| முல்லைத்தீவு | - | 07 |
| திருகோணமலை | - | 08 |
| மட்டக்களப்பு | - | 09 |
| குருணாகல் | - | 10 |
| அனுராதபுரம் | - | 11 |
| பதுளை | - | 12 |
| இரத்தினபுரி | - | 13 |
| கிளிநொச்சி | - | 14 |

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக கடமைப்பட்டவராவர்.

(ii) பரீட்சார்த்திகளின் பொருட்டு விதித்துரைக்கப்பட்ட இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்வொழுங்குவிதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

4. **தகைமைகள்**.- அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இன் நியமனமொன்றை பெற்றுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெறுவர்.

5. விண்ணப்பம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி பரீட்சார்த்திகள் தமது விண்ணப் பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2009, ஓகத்து மாதம் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.– பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படு கின்றனர். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

7. **விண்ணப்பங்கள்**.- மாதிரி விண்ணப்பப்படிவத்தின் இல. 1 முதல் 5 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்தில் உள்ளடங்கும் வண்ணம் ஏ "4" அளவினதான ஒரு தாளில் விண்ணபத்தைத் தயார்செய்தல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் தயாரித்துக் கொள்ளப்படுமாயினும் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவமானது இத்துடன் உள்ள படிவத்திற்கேற்ப தயார் செய்தல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பத்தை மட்டுமே அனுப்பி வைத்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி அனுப்பிவைத்தலாகாது என அறிவித்துக் கொள்ளப்படுகிறது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமைபெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பின் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத் திலும் குறிப்பிடவும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதன் பின்னரான அமர்வுகளின்போது அலுவலர்கள் ஒரே அமர்வில் முழுப்பரீட்சைக்குத் தோற்றுவதானால் ரூபா 90 பெறுமதியான முத்திரைகளையும், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 50 பெறுமதியான முத்திரைகளையும் விண்ணபத்தில் ஒட்டி அம்முத்திரைகளில் தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இப்பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணத்தை வேறேதேனும் ஒரு பரீட்சைக்காக மாற்றவும் முடியாது.

8. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான நேர சூசியின் பிரதியும் அனுமதி அட்டையும் அனுப்பி வைக்கப்படும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளார் என்பதற்கான சான்று அல்ல என்பதைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வை யாளரிடம் அவர்களின் கையொப்பங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பான அறிவிப்பொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகைகளில் வெளியிடும். அறிவிப்பு வெளியிடப்பட்டு 2/3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். தங்கள் வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் பதிவுசெய்த பற்றுச்சீட்டும், கொழும்பிற்குப் புறம்பாக எனில் அனுமதி அட்டை அனுப்பிவைக்க

வேண்டிய பெக்ஸ் இலக்கமும் குறிப்பிட்ட தங்களது கோரிக்கை கடிதத்தை வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

9. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

10. அலுவலர்கள் தாம் தொடர்புடைய சேவையில் சேர்வதற்கு உரிய பரீட்சைக்கு தோற்றிய மொழி மூலம் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் இப்பரீட்சையில் தோற்றலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் சேர்ந்த அலுவலர்களும் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் இப்பரீட்சையில் தோற்றலாம். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

11. உத்தியோகத்தர்கள் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வெவ்வேறு தடவைகளிலும் தோற்றலாம். ஆயினும் சித்தியெய்துவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு அரசாங்க முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் 5:2 பந்தியைப் பார்க்கவும்.)

12. அரசகரும மொழிக் கொள்கையின் குறிக்கோள்களுக்கு அமைய சகல அலுவலர்களும் தமது விண்ணப்பங்களை அரசகரும மொழியில் தயார்படுத்த வேண்டுமென்பதுடன் அவற்றை அம்மொழியினாலே நிரப்பவும் வேண்டும்.

13. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படும். அத்துடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளது பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

14. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சார்த்திகள் பின்குறிப்பிடப்படும் பாடங்கள் உள்ளடங்கிய எழுத்துமூலப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும் :

| | பாடம் | பாட இலக்கம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| (01) | அலுவலக முறைகளும் நடைமுறையும் | 01 | 02 மணித்தியாலங்கள் | 100 |
| (02) | அரசாங்க அலுவலகங்களில் கையாளப்படும் கணக்கு முறைகள் | 02 | 02 மணித்தியாலங்கள் | 100 |
| | மொத்தம் : | | | 200 |

14.1 அலுவலக முறைகளும் நடைமுறையும்.- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைகள் தொடர்பான அறிவையும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும் :

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள் (காலம் : 30 நிமிடம்) - 25 புள்ளிகள்

பகுதி II - பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத் தாள் - 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (காலம் : 90 நிமிடம்) - 75 புள்ளிகள்

14.2 அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தும் கணக்கு முறைகள்.- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தும் கணக்கு முறைகள், கணக்குப் பதிவேடுகள், அதனுடன் தொடர்புடையதாக வெளியிடப்பட்டுள்ள திறைசேரி நிதி ஆலோசனைகள் மற்றும் கட்டளைகள் தொடர்பான அறிவும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப் படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும் :

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள் (காலம் : 30 நிமிடம்) - 25 புள்ளிகள்

பகுதி II - பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத் தாள் - 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (காலம் : 90 நிமிடம்) - 75 புள்ளிகள்

15. இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

பி. பீ. பீ. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2009, யூன் 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2009 (I)**

Efficiency Bar Examination for Officers in Class II of Public Management Assistants' Service – 2009 (I)

(இப்பரீட்சை அறிவிப்பின்படி இணைந்த சேவைகளில் உள்ள அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இன் அலுவலர்கள் மட்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.)

தொடர் இலக்கம் [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2 இன்படி தாங்கள் பரீட்சைக்கு தோற்று வதற்கு எதிர்பார்க்கும் நகரத்தைக் குறிப்பிடவும். பின்னர் மாற்றுவதற்கு : இடமளிக்கப்பட மாட்டாது.)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4 [ ]

(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————.
உதா : SILVA, M. A.

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ————.

1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————.

1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (சிங்களத்தில்/ தமிழில்) :————.

2. சேவையாற்றும் இடமும் முகவரியும் :-

2.1 அலுவலக/திணைக்கள/நிறுவனப் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————.

2.2 அலுவலக/திணைக்கள/நிறுவனப் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) :————.

2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————.

3. பால் :-
பெண் – 1, ஆண் – 0 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. நீங்கள் தற்போது தோற்ற உள்ள பாடம்/பாடங்கள் :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

6. தற்போது வகிக்கும் பதவி :

6.1 பதவி :————.

6.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :————.

6.3 அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இற்கு நியமனம் பெற்ற திகதி :————.

7. 7.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா ? : ————.

7.2 முதன்முறையாக பரீட்சைக்குத் தோற்றாவிட்டால் ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :————.

7.3 முத்திரைக் கூடு :————.

| |
|---|
| முழுப் பரீட்சைக்காக ரூபா 90 பெறுமதியான முத்திரைகளையும் ஒரு பாடமாயின் ரூபா 50 பெறுமதியான முத்திரைகளையும் இங்கு ஒட்டிவிடவும். |

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் உரிய பெறுமதியுடைய முத்திரைகளை ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் அவற்றை பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். முத்திரைகள் ஒன்றன் மேல் ஒன்று ஒட்டுதலாகாது.

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே காட்டப்பட்டுள்ள மொழி மூலமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும் வெளிப்படுத்துகிறேன். இதனுள் ஒட்டப்பட்டுள்ள ரூபா .................................. பெறுமதியான முத்திரைகள் செல்லுபடியானவையும் முன்னர் உபயோகிக்கப் படாதவையும் என நான் உறுதிப்படுத்துகிறேன். இப்பரீட்சை தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும், பரீட்சை சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள எல்லா ஏற்பாடுகளுக்கும் நான் உடன்படுகின்றேன் என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :————.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்தத் திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

திரு./ திருமதி/ செல்வி ...................................... எனது அலுவலகத்தில் சேவையாற்றும் அலுவலர் என்றும் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் .................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.
திகதி :————.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப் பட்டதென்றும்,
(ii) அலுவலர் இணைந்த சேவையில் உள்ளவர் என்றும்,
(iii) அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் தோற்றினார்/ தோற்றவில்லை* என்றும்,
(iv) அலுவலர் இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியிருப்பதனால் உரிய பெறுமதியுடைய முத்திரை இவ்விண்ணப்பப் படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும்,
(v) அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர் என்றும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

* தேவையற்றவைகளை கீறிவிடவும்.

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.
திகதி :————.

7-298

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.